முன்பு கூறியபடியே சிகிச்சை பெற்ற வர்களுக்கு இலவச கண்ணுடியும், சிகிச்சைப் பெற்றவர்களுக்கும், அவர்களுடைய உதவி யாளாகளுக்கும் இலவச உணவு வசதியும் கொடுக்கப்பட்டன.

கேநதிரிய சமுஸ்கிருத் வித்யா பீடம்

"அனைத்து நாடுகளால் போற்றப்படுவ தும், ஏறக்குறைய உலகத்திலுள்ள எல்லா மொழிகளின் தனித்தன்மைகளைத் தன்னிடம் ஒருங்கே கொணடுதுமானமொழி வடமொழி. அம்மொழியில் கூறப்படாத பொருள்கள் எதுவுமே இல்லை" என்று மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் திரு. கே. எல். ராவ் அவர்கள், திருப்பதி சமுஸ் கிருத வித்யா பீடத்தின் புதிய கட்டிடத்தை 18–8–73 அன்று திறந்து வைத்துப் பேசிய போது கூறினார் மேலும் அவர் பேசிய போது, வடமொழி ரஷ்யன், பர்ஷியன் போன்ற உலக மொழிகளுக்கு ஒப்ப விளங்கிய போதிலும், பன்னெடுங்காலமாக மனித அறிவு சம்பந்தப்பட்ட எல்லாச் செயதிகளை யும் அம்மொழி தன்னகத்தே கொணடு விளங்கிய போதிலும், அம்மொழிக்குப் போதிய முக்கியத்துவமும், அதன் வளர்ச்சிக்கு அதிக ஈடுபாடும் காட்டாதது, இந்தியர்களாகிய நாம் செய்த துரதிட்டமே யாகும் என்று கூறினார்

இவ்வித்யா பீடம் விரைவில் ஒரு பெரிய வடமொழி பல்கலைக் கழகமாக வளரவேணடும் என்பது தன் அவா என்று கூறி, மக்கள் கடமையில முழு மனத்துடன் ஈடுபாடு கொண்டால்தான், நிறுவனங்கள் செழித் தோங்கி வளரும் என்றும் கூறினார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிப பேசிய, மத்திய உதவி கல்வி அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் திரு. தேவகிநந்தன் பிரசாத் யாதவ், வடமொழியின் வளர்ச்சிக்காக, அரசு எடுத்துக் கொண்ட திட்டங்களை மிக விரிவாக எடுத்துக் கூறினார். அதாவது அரசு, வடமொழி வளர்ச்சிக்காக நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் சுமார் 3 இலட்ச ரூபாய் ஒதுக்கியுள்ளதாகக் கூறினார். மேலும் அவர், வடமொழி வளர்ச்சிக்காக, இவ் வித்யா பீடத்தில் விரைவில் ஒரு மொழி ஆய்வுக் கூடம் ஒன்றும் அமைக்கப்படும் என்றும் கூறினார். இந்த நிறுவனத்தை நிறுவுவதற்கு அதிக உதவியளித்த தி. தி. தேவஸ்தானத்தாருக்கு நன்றி கூறினார்.

கூட்டத்தினரை வரவேற்றுப் பேசிய முன்னாள் பீஹார் மாநில ஆளுநரும், தற் போதைய ஸ்தானிய பிரபந்த சமிதியின் தலைவரான ஸ்ரீமந் எம். அனந்தசயன அய்யங் கார் அவர்கள் "வடமொழி பிராமணர் களுக்குச் சொந்தமான மொழி" எனற தவறான கருத்தைத் தெளியப்படுத்தினர். மேலும் அவர் பேசிய போது வடமொழி பிராமணர்கள் மொழி அல்ல என்றும், பராணத்தலைவர்களும் பிராமணர்கள் அல்ல என்றும் கூறினார். ஆகவே உலக மொழி களுக்குச்சரிநிகராக விளங்கும்வடமொழியின் வளர்ச்சியைத் தடுப்பது சரியல்ல என்றும், வடமொழியிலிருந்துதான் பல இந்திய மொழிகள் ஆற்றலும், அழகும் பெற்றன என்றும் கூறினார்.

இந்நாள் வரை வித்யா பீடம் தொடங்கிய திலிருந்து அதற்கு இலவச வாடகை கட்டிடமும், தற்சமயம் இவ்வித்யா பீடத்தின் புதிய கட்டிடத்திற்கும், அதன வளர்ச்சிக்கும இலவசமாக 41 ஏக்கர் நிலமும், 10 இலட்ச ரூபாயும் கொடுத்த தி. தி. தேவஸ்தானத்திற்கு நன்றி கூறினர்.

இதுவரை பொது நிதிகளைக் கொண்டும், திருவேங்கடவனின் நிதியுதவிகளைக்கொணடும் நன்ருகச் செயல்பட்டு வரும் இவ்வித்யா பீடம் மிக வரைவில் தன் ஆற்றலிஞல் ஒரு பெரிய வடமொழிப் பல்கலைக் கழகமாக வளரும் என்று தான் நம்புவதாகக் கூறினர்.

ராஷ்ட்ரீய சமுஸ்கிருத் சமஸ்தானத்தின் இயக்குநரான டாக்டர் திரு. ஆர். கே. சர்மா அவர்கள் விழாவிற்கு நன்றி கூறினர். இவ்வித்யா பீடம் சாகித்யம், வியாகர்ணம், வேதாந்தம், நூலக அறிவியல் ஆகியவற்றில் வடமொழிக்கல்வி அளிக்கின்றது (புத்தகாலய விஞ்ஞான சாஸ்திரி என்பது நூலக அறிவியலில் இளநிலை பட்டத்திற்குச் சமமானது) இவ்வித்யா பீடத்தில் 20,000 புத்தகங்களும் 4,000 கையெழுத்துப் படிகளும் உள்ளன. மேலும் 400 ஆராய்ச்சி நாளேடுகளும், பருவ இதழ்களும் வரவழைக்கப்படுகின்றன.

தி. தி. தேவஸ்தான போக்குவரத்து தொழிலாளர் சங்கம

பேராற்றல் வாய்ந்த தி. தி. தேவஸ்தான மேலாணமையின் கீழ், பல்வேறு ஊழியர்களின் சங்கங்கள் தன்னிறைவு கொள்ள, ஊக்கமும் நம்பிக்கையும் பெறுவதுமல்லாமல், தற்போதைய நிறுவனத்திலிருந்து சுதந்திரமாகப் பொருளுதவி பெறவும் வசதியுள்ளது இதற்குச் சான்ருக, தி.தி. தேவஸ்தான போககுவரத்து ஊழியர்கள், தங்களுடைய சங்கத்தின் மூலம் தொழுகை நடத்தவும், திருமணம் நடத்தவும கூடிய ஓர் அரங்கை, தங்களுடைய வாய்ப்பு வளங்களால் கட்டியுள்ளனர். சித்தூர் மாவட்டத் தலைவரும், தி. தி. தேவஸ்தான பொறுப் பாண்மைக் குழுவிற்குப் பதிலாக சிறப்பு அதிகாரியாகச் செயல்பட்டு வரும் திரு ஏ. வள்ளியப்பன் அவர்கள் இப்புதிய அரங்கத்தை 8–8–73 அன்று திறந்து வைத்தார். தி. தி. தேவஸ்தான செயலாட்சித் தலைவரான திரு. எஸ். வி. சுப்ரமணியன் அவர்களும வேறு பல முக்கிய நபாகளும விழாவில் பங்கேற்றனர்

அன்று மாலை தொழிலாளர்கள் சங்கத்தின் கலைநிகழ்ச்சிப பகுதியை, புகழ்பெற்ற திரைப் பட நடிகா திரு சி. நாகபூஷணம் அவர்கள் தொடக்கி வைத்தார். தி தி. தேவஸ்தான போக்குவரததுத் தலைமை மேலாளர் திரு. ஜி. பிரபாகர குப்தா அவர்கள் விழாவிற்குத் தலைமைத் தாங்கிஞா. "பிரஜா சேவையே மா கர்த்தவ்யம்" என்று ஒரு தெலுங்கு நாடக நிகழ்சசியுடன் இவ்விழா இனிது நிறைவேறியது.

ஒய்வுபெற்ற ஊழியாகளுக்குப பாராட்டு விழா

தி. தி. தேவஸ்தான வரலாற்றில் இதுவரை இல்லாது, முதல தடவையாக இந்த நிறுவனத்தில் பணிபுரிந்து, அதனுடைய இன்ப துனபத்தில் பங்குகொணடு தற்போது ஓய்வு பெற்றுச் செல்லும் ஊழியர்கள், அவர்களின் சேவையைப் பாராட்டும் வகையில் கௌரவிக்கப்பட்டார்கள். தி. தி. தேவஸ்தான ஊழியர்களின் சங்கம் 20-8-73 அன்று ஒரு கூட்டத்தை நடத்தி, ஓய்வு பெற்ற ஊழியர்கள் ஆகியவர்களின் குடும்ப ஏழ்மை நிலையை எடுத்துக் கூறும் அறிக்கை ஒன்றை செயலாட்சித தலைவருக்குச் சமர்ப்பித்தார்கள். வேலை வாய்ப்புத் தருவதில் இறந்துவிட்ட அலுவலர்களின் குடும்பத்தினர்க்கு முதல் சலுகை கொடுக்கும் செயலாட்சித் தலைவரின் பரந்த மனப்பான்மையை பாராட்டப்பட்டிருக்கும் அவ்வறிக்கையில் இந்தச் சலுகையை ஒரு சட்டமாக அமுல் படுத்தவேண்டும் என்றும, இதஞல் ஓய்வு பெறும் அவர்கள் தாங்கள் ஓய்வு பெற்ற பிறகு தங்கள் குடும்ப நபர்க்கு ஒரு வேலை கிடைப்பதின் மூலம் தங்களுக்கு ஒரு பாதுகாப்பு இருக்கிறது என்று நினைத்து மகிழ்ச்சி அடைவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. ஊழியர்களின் துன்பங்களைத் துடைப்பதற்குத் தனஞலான உதவியைச் செய்வதாக, செயலாட்சித் தலைவரான திரு எஸ் வி. சுப்ரமணியன் அவர்கள் உறுதி கூறினர்.

தி. தி. தேவஸ்தானம் புதிய உதவி செய லாட்சித் தலைவரான திரு. டி. வெங்கடேசு வரலு அவர்கள், மேலாண்மைக்கும், ஊழி யர்களுககும் இருக்கும் உறவைப் பற்றிப் பேசினா. பிறகு இரணடு தெலுங்கு நாடக நிகழ்ச்சிகளுடன விழா இனிது நிறை வேறியது

நியமனஙகள்

விசாகபடடின வட்டார வருவாய்ததுறை அலுவலரான திரு. டி. வெஙகடேசுவரலு, தி தி தேவஸ்தானம் உதவி செயலாட்சித் தலைவராகத் தறகாலிகமாக மாற்றப்பட் டுள்ளார். இதுவரை சுமார் 3½ ஆணடுகளாக இந்த தி. தி. தேவஸ்தான வெற்றிககு அயராது உழைத்த திரு. எம் இராமசாமி ரெட்டி அவர்கள், திரும்பவும தன்னுடைய தலைமைத் துறைக்கே அழைக்கப்பட்டு, பிறகு மேற்கு கோதாவரி மாவட்டம் ஏலூர் வட்டார வருவாய்த்துறை அலுவலராக நிய மனம் செயயப்படடுள்ளார்

ஆந்திர பிரதேச செயலாட்சிப் பொறி யாளரான திரு. வெங்கட நாராயணா, தி. தி. தேவஸ்தான செயலாட்சிப் பொறியாளராக பொறுப்பேற்றுக் கொண்டார். அதே சமயத்தில் இதுவரை தி. தி. தேவஸதான செயலாடசிப பொறியாளரான திரு. கே. சீனுவாசலு செட்டி திரும்பவும் தலைமை அலுவலகத்திற்கே சென்று விட்டாா.

டாக்டர் டி. அாகக சோமயாஜி, எம் ஏ. பிஎச. டி. இந்து தர்ம பிரதிஷ்டானத்தின் செயலாளராகப் பொறுப்பேற்றுக்கொண டார்.

வேறு செயதிகள்
திருபபதி குடை ஊர்வலம்

சென்னையிலுள்ள திருப்பதி குடை அற நிலையததாரால் நடத்தப்படட வருடாநதிர திருப்பதி குடை ஊாவலம், சென்னை உயர் நீதிமன்றத்தின நீதிபதியான மாணபுமிகு திரு. வி. ராமசாமி அவர்களின முன்னிலை யில், 29—8—73 அன்று மாலை 6 மணிககு நடந்த பூசைககுப் பிறகு, புறப்பட்டது. கடைசி பூசை 27—9—73 அன்று மாலை 6 மணிக்கு நடைபெறும பிறகு ஊர்வலம் 28—9—73 அன்று சென்னையிலிருந்து புறப் பட்டு, திருமலைக்கு 3—10—73 அன்று வநது சேரும். அன்று இறைவனின் கருடோத்சவம் நடைபெறும். முந்திய ஆண்டுகளில் கொடுத்தது போலவே இப்புதிய குடைகள், திருவேங்கடவனுக்குக் கருடசேவை விழா விற்காகப் பரிசாக வழங்கப்படும.



கவனிக்கவும்

மணியாாடர் கூப்பனில் (Money Orders) சநதாத்தொகை அனுபபும்போது, சந்தா நெம்பரைக் குறித்து அனுப்பவும் சநதாதாராகள் தங்களுடைய நெமபரை ஸப்தகிரி மாத வெளியீடு உறையில (Cover) கவனிக்கவும்.

ஆசிரியர்

தைத்தரீய ஆரண்யகம்

॥ तैत्तरीयारण्यकम् ॥

(சூர்ய நமஸ்காரம்)

விதவான் நடதூர் ஸ்ரீ தேசிகாசசாரியாா.

★ ★ ★

(முன இதழத தொடாசசி)

அனுவாகம் – 15

சூரியனின் எட்டு உருவங்கள்

१. अथादित्यस्याष्टपुरुषस्य ।

அத ஆதித்யஸ்ய அஷ்டபுருஷஸ்ய ||க||

அத – இனி, அஷ்ட புருஷஸ்ய – எட்டு உருவங்களாக உள்ள, ஆதித்யஸ்ய – சூரியனைப் பற்றி மந்திரங்கள் கூறப்படு கின்றன.

இனி எட்டுவித புருஷர்களின் உருவங் களாக விளங்கும் சூரிய பகவான் துதிக்கப் படும் விதம் கூறப்படுகிறது.

२. १) वसूनामादित्यानां स्थाने स्वतेजसा भानि ।।
२) रुद्राणामादित्यानां स्थाने स्वतेजसा भानि ।।
३) आदित्यानामादित्यानां स्थाने स्वतेजसा भानि ।।
४) सतां सत्यानाम् । आदित्यानां स्थाने स्वतेजसा भानि ।।
५) अभिघ्न्वतामभिघ्नताम् । वातवतां मरुताम् । आदित्यानां स्थाने स्वतेजसा भानि ।।
६) ऋभूणामादित्यानां स्थाने स्वतेजसा भानि ।
७) विश्वेषां देवानाम् । आदित्यानां स्थाने स्वतेजसा भानि ।।
८) संवत्सरस्य सवितुः । आदित्यस्य स्थाने स्वतेजसा भानि ।।

1. வஸுனும் ஆதித்யாஞம் ஸ்தானே ஸவதேஜஸா பானி|
2. ருத்ராஞம் ஆதித்யாஞம் ஸ்தானே ஸ்வதேஜஸா பானி|
3. ஆதித்யாஞம் ஆதித்யாஞம் ஸ்தானே ஸ்வதேஜஸா பானி|
4. ஸதாம் ஸத்யாஞம்| ஆதித்யாஞம ஸதானே ஸவதேஜஸா பானி|
5. அபிதூாண்வதாம் அபிக்னதாம்| வாதவதாம் மருதாம்| ஆதித்யாஞம ஸதானே ஸ்வதேஜஸா பானி|
6 ருபூணும் ஆதித்யாஞம் ஸதானே ஸ்வதேஜஸா பானி|
7. விச்வேஷாம் தேவாஞம்| ஆதித்யாஞம் ஸ்தானே ஸவதேஜஸா பானி|
8 ஸம்வதஸரஸ்ய ஸவிதுঃ| ஆதித்யஸ்ய ஸ்தானே ஸ்வதேஜஸா பானி|

1. வஸுனும் – எட்டு வசுக்களின் உருவங் களாக விளங்கும், ஆதித்யாஞம் – சூரியர் களுடைய, ஸ்தானே – உலகத்தில், வசித்துக் கொண்டு, ஸ்வதேஜஸா – அவர்களுடைய அனுக்கிரகத்திஞல் கிடைத்த எனது ஒளி யுடன், பானி – நான் விளங்கக்கடவேன்.

ஒ சூரியனே! உமது மற்ற உருவங் களான எட்டு வசுக்களின் உலகத்தை அடைந்து, அவர்களுடைய அருளால் அங்கு வசித்து, ஒப்பற்ற ஒளியையும் பெற்று விளங்குவேஞக. இவ்வாறு விளங்கும்படி நீர் தான் எனக்கு ஆசி புரிய வேண்டும். இதே மாதிரி மற்ற இடங்களிலும் வைத்துக் கொள்ள வேண்டும்.

2. ருத்ராஞம் ஆதித்யாஞம் – பதிஞேறு ருத்திரர்களின் உருவங்களாக விளங்கும் ஆதித்தியாகளுடைய உலகத்தை அடைந்து

அவர்களுடைய அருளால் ஒப்பற்ற ஒளியைப் பெற்று நான் விளங்குவேனாக.

3. ஆதித்யானாம் ஆதித்யானும் — பன்னிரண்டு ஆதித்தியர்களின் உருவங்களாக விளங்கும் ஆதித்தியர்களின் உலகத்தை அடைந்து அவர்களுடைய அருளால் ஒப்பற்ற ஒளியைப் பெற்று நான் விளங்குவேனாக.

4. ஸத்யானும் — உண்மையையே பேசுகிற, ஸதாம் — மக்களால் பூஜிக்கப்பட்ட மஹரிஷிகளின் உருவங்களாக விளங்கும் ஆதித்தியர்களின் உலகங்களை (இருப்பிடங்களை) அடைந்து அவர்களுடைய அனுக்கிரஹத்தினால் ஒப்பற்ற ஒளியைப் பெற்ற நான் விளங்குவேனாக.

5. அபிதூன்வதாம் — மேகங்களை அங்குமிங்கும் சஞ்சாரம் செய்யும்படி அசைக்கின்றவர்களும், அபிக்னதாம் — வழியில் செல்பவர்களைக் காற்று பலமாக வீசி துன்புறுத்துகிறவர்களும், வாதவதாம் — காற்றுக்குத் தலைவர்களாக இருப்பவர்களுமான, மருதாம்- மருத்துக்களின் வடிவங்களாக இருக்கும் ஆதித்தியர்களின் உலகத்தை அடைந்து, அவர்களுடைய ஆசியினால் ஒப்பற்ற ஒளியைப் பெற்று நான் விளங்குவேனாக.

6. ருபூணும் — ருபுக்கள் என்கிற தேவர்களின் உருவங்களாக விளங்கும் ஆதித்தியர்களின் உலகத்தை அடைந்து அவர்களின் அனுக்கிரஹத்தினால் ஒப்பற்ற ஒளியைப் பெற்று நான் விளங்குவேனாக.

7. விச்வேஷாம் தேவனும் — விசுவேதேவர்களின் உருவங்களாக விளங்கும் ஆதித்தியர்களின் உலகத்தை அடைந்து அவர்களின் அனுக்கிரஹத்தினால் ஒப்பற்ற ஒளியைப் பெற்று நான் விளங்குவேனாக.

8. ஸவிதுঃ — பிராணிகளை வளர்க்கும், ஸம்வதஸரஸ்ய — ஆண்டு என்கிற காலத்தின் அபிமானி தேவதையின் உருவமாக விளங்கும ஆதித்யஸய ஸ்தானே — ஆதித்தியனின் உலகத்தை அடைந்து, அவருடைய அனுக்கிரஹத்தினால ஒப்பற்ற ஒளியைப் பெற்று நான விளங்குவேனாக.

சூரிய கிரணங்கள்

३. ओं भूर्भुवः स्वः ।
रश्मयो वो मिथुनं मानो मिथुन रीढ्वम् ॥

ஓம் பூர் புவঃ ஸவঃ|
ரச்மயோ வோ மிதுனம் மாநோ
மிதுனம் ரீட்வம் ||௩||

ஓம் — பிரணவத்தின் கருத்தாகவும், பூர்புவঃ ஸ்வঃ — பூலோகம், புவர்லோகம் சுவர்க்கலோகம் ஆகிய மூன்று உலகங்களின் உருவமாக இருக்கும், சூரியனுடைய, ரச்மயঃ — கிரணங்களே! வঃ — உங்களுக்கு, மிதுனம் — சேர்ந்து இருக்கும் தன்மை உள்ளது, அது, நঃ — எங்களுடைய, மிதுனம்- சேர்க்கையை, மா ரீட்வம் — பிரிக்க வேண்டாம்.

பிரணவத்தின் பொருளாயும், மூன்று உலகங்களுக்கும் தலைவராகவும் விளங்கும் சூரிய பகவானின் கிரணங்களே! நீங்களும் சூரியனும், மனைவி கணவன் போல், ஒருவருக்கொருவர் உபகாரமாக இருக்கிறீர்கள். உங்களுடைய இந்த அரிய சேர்க்கையானது, உலகத்தில் வாழும கணவன் மனைவி இவர்களுடைய சேர்க்கையைப் பிரிக்கவேண்டாம். உங்களுடைய அனுக்கிரஹத்தினால் எல்லா தம்பதிகளும் சுகமாக வாழ்வார்களாக,

பதினைந்தாவது அனுவாகம் முற்றிற்று.

(தொடரும்)

ஸ்ரீ வேங்கடேசப் பெருமானின்

பிரம்மோற்சவம்

* * *

திருமலையில் நடைபெறும் உற்சவங்கள் எல்லாவற்றிலும் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளின் பிரம்மோற்சவம் வெகு விமரிசையாகவும், விசேஷமாகவும நடத்தப்படுகிறது. பெருமானைத் தரிசிக்க வரும் ஆயிரக் கணக்கான பக்தர்களுடன் எப்பொழுதும் மகிழ்ச்சி ததும்ப உற்சவ நாட்களைப்போல் காட்சி அளிக்கும் திருமலை, பிரம்மோற்சவத்தின் போது கண்ணுக்கு விருந்தளிக்கும் தீபாலங்காரங்களுடனும், இனிமையான பத்திப் பாடல்களுடனும மனதைச் சுத்தப் படுத்தும் புராண கதா காலக்ஷேபங்களுடனும், உற்சவத்திற்கேற்ற உற்சாகத்துடன் (திருமலையெங்கும்) விழாக்கோலம் பூண்டிருக்கும். பல்வேறு வாகனங்களினமேல் எம்பெருமானுடைய வீதி புறப்பாடுகளையும் ஜாதி பேதமின்றி பகவானைத் தரிசிக்க வரும் பக்தர்களையும் காணும்போது பூலோகத்தில் வைகுண்டம் என்று ஒன்று இருக்குமானால் அது இதுவேதான் என்று உறுதிப்படுத்துவது போல் தோன்றும்.

காலத்துக்குத் தக்கவாறு மாறாமல் இந்த நாள்வரை சீர்குலையாமல் ஒரே மாதிரியாக நடத்தப்பட்டு வருகின்ற இந்த பிரம்மோற்சவம சதுர்முகப் பிரம்மாவினால் ஆரம்பிக்கப் பட்டதென வராஹபுராணம், வேங்கடாசல மாஹாத்மியம், வேங்கடேச இதிஹாஸமாலை முதலிய நூல்களிலிருந்து தெரிய வருகிறது.

கால நிர்ணயத்திற்குக கட்டுப்படாத புராணங்களை விட்டு ஆராய்ந்ததில், ஏழாவது நூற்றாண்டில் பல்லவராஜ வம்சத்தின் இராஜ குமாரியான சமவாய் என்றவள் இநத உற்சவத்திற்காகச் சில மான்யங்களையும், தஙகத்தையும் கொடுத்ததோடு மட்டுமனறி வெள்ளியில் செய்யப்பட்ட மணவாளப் பெருமானின் உற்சவ விக்கிரஹத்தையும் கோவிலுக்குக் கொடுத்ததாகச் சில சாஸனங்களால் தெரிய வருகின்றது. புரட்டாசி, மார்கழி மாதங்களில் மட்டுமல்லாமல், ஆடிமாதம் கூட அதி விசேஷமாக உற்சவஙகள நடைபெற்றதாகச் சாஸனங்கள் தெரிவிககின்றன. இத்துடன் விஜய நகராதிபதியான இரண்டாவது ஹரிஹரராயர் என்றவா மற்றொரு பிரம்மோற்சவததை ஏற்படுத்தி அதற்கான மான்யங்களையும் கொடுத்தாராம!

வெவவேறு மாதங்களில் திருவிழாவைப் போல் பிரம்மோற்சவங்கள எத்தனையோ நடைப்பெற்றதாகச் சரித்திரத்தில இருநதாலும், பிரம்மாவினால் ஏற்படுத்தப்பட்ட புரட்டாசி மாதப் பிரம்மோற்சவம ஒன்றுதான் இப்போது நிலைத்து நினறுள்ளது. மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை வரும் அதிக மாதத்தினால் பாத்ரபதத்தில் ஒரு உறசவமும, நவராத்திரி உற்சவம் எனற பெயரில (புரட்டாசி) ஆச்வயுஜ மாதத்தில இனனொரு பிரமமோற்சவமும் நடைபெறுகின்றன

பேருக்குப பத்துநாள் உற்சவம் என்றாலும், முதல்நாள் அதிக கவர்ச்சியினறிக் கடந்துவிடும். அன்று மாலை எமபெருமானின சேனாதிபதியாகிய ஸ்ரீவிஷ்வக்ஸேனா எழுந்தருளி, திருவீதி ஊர்வலம் நடநது, கல்யாண மண்டபத்தில் ஏற்படுத்தப்பட்ட யாகசாலையில் உள்ள குண்டத்திற்கு வேண்டிய மண எடுத்துக்கொண்டு திரும்பி எழுந்தருளுவார். மறுநாளிலிருந்து நடைபெறும் உத்ஸவத்



சேஷ வாகனம

திற்கு வருமாறு இதர தேவதைகளுக்கு அழைப்பு விடுதல், திருமலைராயமண்டபத்தில் நடைபெறும் ஆஸ்தானத்தில் ஸ்ரீசேனாபதியாருக்கு சன்மானம் செய்தல் முதலியவை நடைபெறும்.

இரண்டாவது நாள் உற்சவமூர்த்தியான மலையப்பஸ்வாமி, ஸ்ரீதேவி, பூதேவிகளுடன் திருமலைராயர் மண்டபத்தில் எழுந்தருளச் செய்வார்கள். குறிப்பிட்ட முகூர்த்தத்தில் மங்களவாத்ய, வேதகோஷங்களின் நடுவில் முக்கிய அர்ச்சகரால் கருடத்வஜாரோஹணம் நடத்தப்படும்.


பிரம்மோற்சவம் என்ற பெயருக்கேற்றாற் போல் ஒவ்வொரு நாளும் எம்பெருமானின் திருவீதிவலத்திற்குமுன் பிரம்மரதம் என்ற சிறிய இரதம் ஒன்றை ஓட்டிச் செல்வார்கள். மறைமுகமாக இந்த உற்சவத்திற்கு பிரமமா தலைமை தாங்குகிறாராம். அந்தநாள் இரவு உற்சவமூர்த்தியான மலையப்பஸ்வாமி தம் உபயநாச்சிமார்களுடன் பெரிய சேஷ வாகனத்தில் எழுந்தருளுவார்

மறுநாள் காலை மலையப்பஸ்வாமிக்கு சிறிய சேஷ வாகனத்திலும், இரவு ஹம்ஸவாகனத்திலும் திருவீதி உத்ஸவம் நடத்தப்படும்.

மூன்றாவதுநாள் காலை மலையப்பஸ்வாமிக்கு சிம்ஹ வாகனத்திலும, இரவு முத்துப்பந்தலிலும் ஊர்வலம் நடைபெறும்.

நான்காவது நாள் காலை கண் கொள்ளாக் காட்சியாக எம்பெருமானுக்கு உபயநாச்சிமார்களுடன் கல்பக விருக்ஷ வாகனத்தில் (புன்னைமரம்) திருவீதி ஊர்வலம் நடைபெறும். இதைக் காணும்போது - எல்லாவற்றையும் விட்டுவிட்டு தன்னை சரணடைந்

பிரமமோற்சவததினபோது நடைபெறும ஊஞ்சல் சேவை



தோர்க்குக் கேட்ட வரங்கள் எல்லாம் வழங்கும் கல்பக விருக்ஷம நான்தான் எனத் தெரிவிப்பவர்போல் எம்பெருமான் காட்சி அளிப்பார். அநநாள் இரவு ஸர்வபூபால வாகனத்தில், பௌர்ணமி நிலவுபோல் காணப்படும மின்சார விளக்கில ஒளியுடன் கூடி உபய நாச்சியார்களுடன் பெருமாள், ''கஷ்டப்படுகிறோம், கருணை செய்'' என்று கைகூப்பி மெய்மறந்து நிறகும் பக்தர்களுக்கு 'வருந்தாதீர்கள், உங்களுக்கு நானிருககிறேன்' என்று கூறுபவர்போல் விளங்குவார்.

ஐநதாவது நாளன்று அதி முக்கியமாகிய மோகினி அவதாரம் அன்று பெருமாள் பெண் கோலம் பூணுவார். பாற்கடல் கடைந்தபோது கிடைத்த அமிர்தத்திற்காகத் தேவர்களும் அசுராகளும் போர் செயத போது தீயவர்களைத் தண்டித்து நல்லவர்களைக் காப்பற்ற மோகினி அவதாரம் எடுத்து, அசுரர்களை ஏமாற்றி தேவர்களுக்கு அமிர்தம் கொடுத்த ஜகன்மோகன அவதாரம்தான் இந்த மோகினி அவதாரம்! காமதேவனைச் சாம்பலாக்கிய சிவபெருமானையே மயக்கிய இந்த மோகினியைப்பற்றி புராணங்களில் மிக நன்றாக வர்ணிக்கப்பட்டுள்ளது. இவ வுற்சவததின்போது அதிக அலங்காரங்கள் செய்து, உடைகளை மாற்றி, வரதஹஸ்தத்தை அபயஹஸ்தமாகவும் மாற்றி, மோகினியை போலவே விசேஷ அலஙகாரம செய்து தந்தத்தினால் செய்த பல்லககில எம்பெருமானுக்கு ஊர்வலம் நடத்தப்படும். அன்று அந்தப் பெருமானைக் காணபவர் கொடுத்து வைத்தவர்கள்தான்.

பிரம்மோற்சவத்திலேயே அதி விசேஷமானது - அதிமுக்கியமானது கருடோத்ஸவம். நாட்டின் நான்கு மூலைகளிலிருந்தும் பக்தப் பெருமக்கள் பெரும்பாலராகக் கூடி அதிகாலையிலிருந்தே கோவிலின் அருகே காத்திருக்க, வருடத்திலேயே அன்றொரு நாள்தான் மகரகணடி, லக்ஷ்மீஹாரம் முதலிய விசேஷ ஆபரணங்களை அணிந்து கொண்டவராய் கலியுக வைகுண்டப் பெருமாள், கருடவாகனததில் திருவீதிவலம வருவார். அதைக் கண்டு வர்ணிக்க சக்தியுடையோர் அதிருஷ்டசாலிகள்தான்! இநத கண கொள்ளாக் காட்சியைக் காண்போருக்கு மறுபிறவி இல்லையோ எனத் தோன்றும்.



ஹனுமந்த வாகனம்

ஆறுவதுநாள ஸ்ரீமலையப்பஸ்வாமி அழகாக அலங்கரிக்கப்பட்டு ஹனுமந்த வாகனததில் ஊர்வலம் வருவார். அன்று மாலை ஸ்ரீ மலையப்பஸ்வாமி உபயநாச்சிமார்களுடன் மேற்குத் தெருவில் உள்ள வஸநத மண்டபத்தில் எழுந்தருளுவார். அங்கு அவருக்கு ஸுகந்தத்ரவ்யங்கள கலந்த நீரினால் திருமஞ்சனம் நடைபெறும். அன்றிரவு பெருமானுக்கு யானை வாகனத்தில் திருவீதி உற்சவம் நடைபெறும்.

ஏழாவது நாள் காலை சூரியப்பிரபையிலும், இரவு சந்திரப்பிரபையிலும் நடக்கும் ஊர்வலத்தைக் கண்டால் சூரிய சநதிரர்களைக்

கூட ஆள்பவன் நான்தான் எனக கூறுவதற் காகவே பெருமாள் புறப்பட்டாரோ எனறு தோனறும.



அசவ வாகனம

எட்டாவது நாள்தான் இரதோத்ஸவம. அன்று காலை மலையப்பஸ்வாமி அதி விசேஷ மாக அலங்கரித்துக் கொண்டு, தன் இருபக கங்களிலும் நாச்சிமாா இருவரும நிற்க, கலா வைபவத்துடன விளங்கும் தேரில் ஏறி காட்சியளிப்பார். ஆயிரக்கணக்கான பக்தா கள் கருடோத்வைத்தைப் போலவே கூடி ஆனநத பரவசத்தில் கோவிந்த நாமத்தைத் துதித்துக் கொண்டே இரததகில் கட்டிய வடத்தைப் பிடித்து இழுத்துச் செலவதைக் காண மிகமகிழ்ச்சியாக இருககும். அன்றிரவு எம்பெருமான குதிரை வாகனத்தில் காட்சி யளிப்பார்.


ஒன்பதாதது நாள் அன்று அவப்ருத உற்சவம் (தீர்த்தவாரி) நடைபெறும் இது தான் கடைசி உற்சவம். உபயநாசசிமார் களுடன ஊர்வலமாக ஸ்வாமி புஷ்கரிணியின் அருகில உள்ள ஆதிவராஹஸ்வாமி ஸன்னி-தியை அடைவார். அங்கு பண்டிதர்களால் குறிப்பிடப்பட்ட முகூர்த்தததில எம்பெரு மானுக்குத் திருமஞ்சனம் நடைபெறும் வேங்கடேசப் பெருமானின் பிரம்மோத்ஸவம சுபமாக முடிந்ததற்கு அறிகுறியாக ஸுதர்சன சககரத்திற்கு ஸ்வாமி புஷ்கரணியில் திரு மஞ்சனம் நடைபெறும். சுற்றுபபுரததி லிருநது ஆயிரமாயிரமாக பக்தர்கள் திருமலை யில் ஸ்வாமி புஷ்கரிணி அருகில் காத்திருந்து, சகரஸ்னனம் நடைபெறும் சமயததில் கோவிந்த நாமகோஷம் செய்த வணணமாக ஸ்வாமி புஷ்கரிணியில் ஸனனம செய்வார் கள். முககோடி நதிகள கலக்கும் சமயத்தில் புஷ்கரணியில முழுகினுல் பாவஙகள் நீங்கி நிச்சயமாக மோக்ஷம கிடைக்கும் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

அபிஷேகத்திற்குப் பிறகு எம்பெருமான் கோவிலுக்குத் திரும்புவார். முதல்நாள் அன்று உற்சவ ஆரம்பத்திற்கு அறிகுறியாக ஆரோகணம் செய்யப்பட்ட கருடத்வஜத்தை இறக்கி, மங்களகரமாக உற்சவம் முடிந்த தற்காக மங்களாக்ஷதை வினியோகம் நடை பெறும்.

மேறகுறிபபிட்ட ஆலய வைபவஙகளோடு இநத பத்து நாட்களும ஆர்ஷ ஸம்ஸக்ருத சபையின் சார்பாக புராண, சஙகீத உபன் யாஸங்களும், நாம சங்கீர்த்தனைகளும நடை பெற்றுக கொணடிருக்கும். மூன்று வருடங் களுககு ஒரு தடவை அதிக மாதத்தினுல் நவராத்திரி உற்சவம எனற பெயரில் ஒரு பிரம்மோற்சவம நடைபெறும். இந்த உத்ஸவத்தில வெள்ளி ரதத்தில் பெருமா ளுக்கு ஊர்வலம் நடைபெறும.

உற்சவங்கள் எல்லாவறறிலும பிரம் மோற்சவம் அதி முக்கியமாகவும், இணை யறறதாகவும் கருதப்படுகிறது. ஏனெனில் எந்த உற்சவத்திலும் இவ்வளவு மககள் ஒரே சமயததில் கூடி பகவானின் அருளைப் பெறுவதையும், இவ்வளவு விசேஷஙகளையும ஒரே சமயததில் கண்டு களிப்பதையும் காண முடியாது. ஐஹிக சுகங்களுக்கு ஆளாகி, மமகார - அகூயைகளுடன் நிறைந்த நம உள்ளத்தைப பெருமானின் தரிசன, குண கீர்த்தனங்களால் சுத்தபபடுத்தி நல்ல வழிக குத திருப்பி மறுபிறவி இல்லாமல் செய்வதே இவ்வித உற்சவங்களின குறிககோள். நம் மிடம் உள்ள ஜோதி நம்மைப் பிரிந்திருந் தாலும், க்ஷணிக சுகத்திலிருநது நம்மை விடு விதது மக்களுக்கு நிலையான ஆனநதத்தை விளைவிக்கும எம்பெருமானுகிய ஜோதி என் றும மாருததாகும், அணையாததும ஆகும்.

(1972-ம ஆண்டு செப்டம்பா மாதம் ஸப்தகிரி பத்திரிகையிலிருந்து மறுபடியும பதிப்பிக்கப்பட்டது.



எச்சரிக்கை

செபபுக் காசுகள, பிரதிமைகள, வாங்கிஞலதான் திருமலேக்கு பல வசதி ஏறபடும எனறு உங்களை ஏமாறறுவதறகுப் பணடாககள காத்துக் கொண்டிருக்கிருாகள். இவற்றை நம்பவேண்டாம் என்று யாததிரிகாகள் இதன் மூலம் எச்சரிக்கை படுத்தப்படுகிருர்கள்.

சுத்தமான பிரார்த்தனைச் சாமானகள், படஙகள், புத்தகங்கள, திருமலே, திருப்பதியில் உள்ள தேவஸதான சததிரஙகளிலும, புத்தகாலயங் களிலும் கிடைக்கின்றன.

இந்து சமயக் கையேடு

திரு அ. நடராஜன், திருப்பதி

★ ★ ★

(முன் இதழ்த் தொடர்ச்சி)

அவதாரம். இராமாயணம், மகாபாரதம் என்னும் இரு இதிகாசங்களிலும் காண்பிக்கப் பட்டிருப்பதுபோல், ' பிரம்மம் மீட்புப் பண்புடையது என்னும கொள்கையே, அவதாரம அல்லது தெய்வப் பிறப்பு என்னும் கருத்தினுல் தெளிவாக்கப் படுகிறது. கடவுளின் மிக உயர்ந்த அல்லது பூரண அவதாரமான கீதாசாரியனுல் (கிருஷ்ணனுல்) இது முழுமையாக விளக்கப்பட்டுள்ளது. பகவானே கீதையில் கூறியிருப்பதுபோல், தர்மம் அல்லது அறம் நலிவடைந்து அதாமத்தினுல் அல்லது மறத்தினுல் அது அழிக்கப்பட வீருககும் நிலையில் கடவுள் உலகில் அவதரிக்கின்ருர். அவர் தமக்கே உரிய சிறப்பான உருவுடன், தீமை புரிந்தவனைத் தண்டிப்பதற்காகவும், நல்லவனுக்கு அருளுவதற்காகவும், உலகின் கண் அறத்தின் மேன்மையை மீண்டும் நிலை நிறுத்துவதற்காகவும் இறங்கி வருகின்ருர். அவதாரத்தின உண்மையான நோக்கம். தீமை புரிந்தவனைக்கூட அவனது பாவ வழிகளிலிருந்து மீட்டுவதும், பக்தனுக்கு அல்லது அடியவனுக்குத் தமது கருணை மயமான வடிவைக் காட்டி அவனுக்கு அருளுவதுமேயாதலால், அது அறத்தன்மையும் சமய இயல்பும உள்ளதாகும். தண்டனை என்பது கூட தயாகாரியம் அல்லது அருட்செயலே; ஏன்னெனில், அதன் உண்மையான நோக்கம் தவறு செய்தவனைத் திருத்துவதேயன்றி அவனை அடக்கி நசுககி விடுவதன்று. அவதாரம் என்பது பௌதிக உடலுடன் உயர் வானதோர் இடத்திலிருந்து தாழ்வானதோர் இடத்திறகு இறங்குவதன்று; கடவுளின் அளவிலா அன்பின் காரணமாகவும் மானிட அல்லது மனிதனுககுக் கீழ்ப்பட்ட நிலைகளுக்கு ஆன்மிக முறையில் இறங்குவதே அவதாரம். இதிகாசங்கள் விஷ்ணுவின் முக்கியமான பத்து அவதாரங்களைப் பற்றிக் குறிப்பிடுகினறன; அவற்றுள் முக்கியமானவை இராமாவதாரமும் கிருஷ்ணுவதாரமுமாகும. மீன் (மத்ஸ்யம்), ஆமை (கூர்மம்), காட்டுப்பன்றி (வராகம்), மனித-சிங்கம் (நரசிம்மம்), குறளன் (வாமனன்) ஆகிய மூதலவதாரங்கள் உலக வரலாற்றின் நெருக்கடியான சமயங்களில், அறத்தின் சிறப்பையும் ஒழுக்கத்தின் மேன்மையையும் மீண்டும் நிலை நிறுத்தி, நேர்மை நிறைந்த வாழ்க்கை முறையை நிறுவுவதற்காகச் செயயப்பட்டவையாகும். இராவணனைப் போன்ற தீயோரைத் தண்டித்து, தர்மததின் நிரந்தரமான மதிப்புக்களின் அடிப்படையில் நேர்மையின் ஆட்சியை அல்லது இராமராஜ்யத்தை நிறுவுவதற்காகவே இராமா பிறந்தாா. இராமாயணமும் கீதையும் இறையன்பின் உருவகமே அவதாரம் எனக் குறிப்பிடுவதுடன், மனித நிலைக்கும் கீழ்ப்பட்ட உயிர் வகைகள் உட்பட்ட எல்லா ஜீவன்களுக்கும் விடுதலை அலலது முக்தி கிடைக்கும் என்று உறுதி கூறுகின்றன. எனவே, அவதாரம் என்பது சர்வலோகரட்சகர் அல்லது அனைத்தையும் மீட்டருளுபவர் என்பதாகப் புகழ்ந்தேற்றப் படுகின்றது.

ஆர்ச்சை: கல், மரம் அல்லது செம்பினு லான மூர்த்தம் அல்லது விக்கிரகம் என்னும் உருவில் இறையருளின் நிரந்தர வடிவ மாகக் கடவுளை வழிபடுவது இந்துக்களிடை மிகுதியாகப் புழக்கத்தில் இருந்து வருகிறது; ஆழ்வார்கள், நாயன்மார்கள் மற்றும் பிற கடவுளடியார்கள ஆகியோரின் தோத்திரப் பாக்களிஞல் இது புனித மடைந்திருப்பதா கும். குறை கூறுபவனுக்கு அல்லது லோகாயத வாதிக்கு (அதாவது, அனைத்தின அடிப்படை யும் சடப்பொருளே என்னும் கொள்கையின னுக்கு) செதுக்கப்பட்ட உருவமாகத் தோன்றுவது, ஆன்மிகக் கண்ணுடைய பக்த னுக்கு உயிர்த் தன்மையையும் அன்பையும் வீசி வழங்கும் பேரெழிலார்ந்த பேசும் தெய் வமாகக் காட்சியளிக்கின்றது. விக்கிரகம் எனப்படும் அது ஒரு வெறும் கருத்தோ இலட்சியமோ, படிமமோ அடையாளமோ அன்று; பக்தனின் வேண்டுகோளுக்கிணங்கி அர்ச்சை வடிவில் நிரந்தரமாக உறையும் கடவுளின் எங்கும் நிறைந்த, அன்புடன கூடிய சான்னித்தியமாக விளங்குகிறது அது. அப்படிமம் இறையருளின் உருவமேயாகும். காண்பதற்குக் கண்களும் கேட்பதற்குக் காதுகளும் உள்ள அனைவரும் எளிதில் அணுக வல்லது அது. விஷ்ணு, சிவன் அல்லது சகதி என்னும் குறிப்பிட்ட ஒரு வடிவில் பகதன் இறைவனை நாடுகிருன், பெயர், உருவம் அனைத்திற்கும் அப்பாற்பட்ட இறைப் பொருள் அந்த வடிவில அவதரிக்கின்றது; பக்தன் அன்பிஞல் நெக்குருகி, கடவுளுடன் கலக்கும் களிப்பில் தன்னையே இழந்து விடு கிருன். ஆழ்வார்கள் இறைவனின் தாள் களின் புகலை நாடி, பக்தியையும் முக்தியை யும் விடத் திருமாலின் வாயிலில் அடியார் கள் மிதிக்கும் கற்படியாய் இருப்பதையே பெரிதும் விரும்பினா

அன்னைத தத்துவம என்பது இறையருளின் தனிப்பட்ட இயல்பாகிய கனிவையும் பரிவை யும் குறிப்பாக வெளிப்படுத்துவதால், அது இந்து மதத்தின் ஒரு சிறப்பான அம்சமாகும். ஈசுவரன் சர்வவல்லமையும் புனிதமும் உடை யவன் என்னும் கருத்து, 'தான் எதற்கும் தகுதியற்ற ஓர் அற்பபபிராணி' என்று பகதனுககிருக்கும் எண்ணம காரணமாக அவனது உள்ளத்தில் ஒருவகை மரியாதை யையும அச்சத்தையுமே தோற்றுவிக்கிறது. சுவர்க்கத்தில் இருக்கும தந்தை அல்லது லோகபதி என்னும் கருத்தில் கடவுளைப் பிரார்த்திப்பது என்பது, ஒவ்வொரு மனித னும இறைவனின் உருவத்தில் ஆக்கப்பட்டி ருப்பவனே அல்லது கடவுளின் மைந்தனே என்னும் கொள்கையின் அடிப்படையில் நிறுவப்பட்டிருப்பதாகும். இந்தக் கருத்தும் கூட, இறையன்பின் அல்லது கடவுளின் கருணையின இயல்பை முழுவதாக வெளிக் கொணருவதில்லை; படைப்பிற்கு மையமாக விளங்கும் பரிவையும் கனிவையும் அளிப்பது தெய்வத்தைத் தாயாகக் கருதும் அன்னைத் தத்துவமே. ஆள்பவர் அல்லது விதிகளை ஏற்படுத்தியவர் என்னும் முறையில் கர்மம, தர்மம் ஆகியவற்றின் கடுமையான விதிகளுக் கேற்பவே கடவுள் ஒவ்வொருவனுக்கும் நியாயம் வழங்குகிருர். விதிகளை மீறுவோ ருக்குக் கருணைக்கான நம்பிக்கை எதுவும் அதில் கிடையாது. நேர்மையான வழி களிலேயே நடபபதாகச் சொல்லிக் கொள்ளக் கூடிய அளவிறகுப் பாவமே செய்யாதவன் அல்லது தூயவன் எவனும் இல்லை. ஆனுல், அன்னை வடிவில் கடவுள் மன்னித்தருளும் தன்மையுள்ளவராக இருக்கின்ருா. கருணை அல்லது தயைக்கு உரியதலலாத பாவம் என்றும் எதுவுமில்லை. எனவே, மீட்புக் கருணையின் வடிவத்தில் லட்சுமி, பார்வதி

அல்லது சக்தியின் அருளை ஒவ்வொருவனும நாடுகிறுன். ஆனுல், கருணை மட்டுமே இருப்பதாக இருந்தால், அது பட்சபாதத் திற்கும் சலுகைக்கும் காரணமாகக் கூடும. பாவம் செயபவன் தெய்வததின் மன்னித் தருளும் இயல்பைத் தனக்குச் சாதகமாக்கிக கொள்ளலாம. ஆகவேதான், இந்துக்கள கடவுளை ஈசுவரன், ஈசுவரி எனனும இரட்டை வடிவில் வழிபடுகின்றனர். சட்டம அல்லது விதி கடுமையாகவிருப்பது; அன்போ தவறையும் மன்னிக்கக் கூடியது. ஆனுல, கடவுளிடம் சட்டமும் அன்பும் ஒருங்கே இணைந்திருக்கின்றன. இரணடாக அவை செயலபட்டாலும் உண்மையில் அவை ஒனறேயாகும்.

(தொடரும)



சந்தாதாரர்களுக்கு ஓர் விண்ணப்பம்

* * *

ஸப்தகிரி மாத இதழ் ஆண்டு சந்தா ரூ. 5/—

கீழ்ககாணும் சந்தாதார்களின் சநதாக்காலம் புதியகணக்கின்படி 31-10-73 ல் முடிவடைவ திஞல், அவர்கள் இந்த விஷயத்தைக் கவனித்து கீழ்க்காணும்படி தங்களுடைய தொகையை எங்களுககு மணியார்டர மூலமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேம. மணியாாடர் கூப்பனில் கீழ்க்கண்ட எணகள் கொண்ட சந்தாதாரர்கள் முழு விலாசத்துடன் விரைவாக தங்களுடைய சந்தாக்களை செலுத்தாவிடில், அவர்களுக்கு மாத இதழ அனுபபமுடியாது.

இம்மாதத்திலிருந்து சநதாதாரர்களின எணகள மாற்றப்பட்டுளளன. ''ஸபதகிரி'' அஞ்சல் காகிததின் மேல் கொடுக்கப்பட்டுள்ள புதிய சந்தா எண்களை சந்தாதாரர்கள் கவனிக்கும்படி கேட்டுக் கொள்கிறேம்.

T 25	5-00	T 619	5-00	T 623	5-00	T 631	5-00	T 740	4-75
T 61	5-00	T 620	5-00	T 624	5-00	T 632	5-00	T 746	5-00
T 422	5-00	T 621	5-00	T 625	5-00	T 634	5-00	T 756	4-92
T 535	5-00	T 622	5-00	T 626	5-00	T 655	5-00	T 841	5-00
T 618	5-00								

மாத இதழுக்குச் சம்பந்தப்பட்ட பணத்தை, மணியார்டர் மூலமாக, ''ஆசிரியர், தி. தி. தேவஸ்தானம், திருப்பதி. (A. P)'' என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். செக் மூலமாகவோ, அல்லது தவறுதலான முகவரிக்கோ அனுப்பும்படியான பணத்தைப் பற்றிய விபரங்களுக்கு அலுவலகம் எந்த விதமான பொறுப்பும் ஏற்காது என்று அறிவிக்கப் படுகிறது.

ஆசிரியர்.

சமரசப் பெருநெறி

பேராசிரியர்: வ. பெருமாள, எம்.ஏ., பி.டி., ஏம்.ஆர்.ஏ.எஸ்.,

தமிழப் பேராசிரியா,

முதல நிலைக்கல்லூரி, உரிகம.

கோலாா தங்கவயல், (மைசூா மாநிலம).

★ ★ ★ ★

உலகத்தில் பல நெறிகள் உண்டு; ஒவ்வொரு நெறியும் ஒவ்வொரு துறையில் சிறப்புடன திகழ்கின்றது. எல்லா நெறிகளிலும் விளங்குகின்ற சிறப்பு இயல்புகளைத் தனனகத்தே கொண்டு திகழ்கின்றது வளளலார் கணட சமரசப் பெருநெறி. சமரச சன மார்க்கம் ஒரு தனி சமயமோ மதமோ அன்று மககள் அனைவரும் பின்பற்றத்தக்க தூய ஒரு நனமார்க்கமாகும. அந்நன்மார்ககத்தின ஒரு சில சிறப்புக்களை மட்டும் இவண ஆராய்வோம்.

அன்பு நெறி:

மனைவி, மக்கள், சுற்றத்தாா, நண்பர் ஆகியோர் மாட்டு இயல்பாக உள்ளத்தில் எழுகின்ற பற்றே அன்ப எனப்படும. மன மலர்ச்சியின் முதல் நிலையே அனபாகும். மக்கள இயைந்து வாழவும் இணைநது வாழவும் அனபாகிய பிணைப்பு மிகவும் அவசிய மாகும். நெஞ்சததில் அனபில்லாத மக்கள் இவ்வுலகில் இருந்தும் பயனில்லை. தண்ணீர் இல்லாத குளம் எத்துணைப் பெரியதாயினும் அது பிறாககுச சிறிதேனும் பயன்படுதல் இல்லை. அதுபோலவே அன்பில்லாத மனிதன் மற்ற துறைகளில் எத்துணைப் பெரியவனுக இருப்பினும் அவனுல் மக்கட்கு யாதொரு பயனும் இல்லை. ஈரம் மெனமையாக இருந்து கொண்டு பொருள்களை ஒட்ட எவ்வாறு துணைபுரிகின்றது. எனவே அன்பிற்கு ஈரம் என்று பெயர். அன்பில்லாதவனை நெஞ்சில ஈரமிலலாதவன எனகிறேம். இராமலிங்க சுவாமிகள் இறைவனை வேண்டும் போது

" அப்பாநான வேண்டுதல்கேட் டருள்
புரிதல வேணடும
ஆருயிாகட கெலலாம்நான் அனபு
செயல வேண்டும "

என்று அன்பையே உள்ளன்புடன் வேணடுகின்றார். எனவே, வள்ளலார் நெறி அன்பு நெறி என்பது புலனுகும்.

அருள் நெறி:

அன்பு நன்றுக மலர்ந்து நாறறிசையிலும் தூய நறுமணம் பரப்பும் போது அருளாகக் காட்சி அளிககின்றது. அறிநதவாகளிடத்தில் மட்டும் செல்லக கூடிய பற்றுணாசசி அன்பு என்று குறிக்கப்படும். அறியாதவர் இடத்தும் செல்லக்கூடிய பற்றுணர்சசி அருள் எனப்படும். அன்பு மலர்கின்ற பூ போன்றது. அருள் மலாநது மணம வீசுகினற பூ போன்றது. அன்பை அரைகுறைவாகப் பழுத்த பழத்திற்கு ஒப்பிடலாம். அருளை நன்றுகப் பழுதத கனிக்கு ஒப்பிடலாம். அன்பில்லாவிட்டால அருள இல்லை அன்பின் நோக்கம் அருள நிலையை அடைவதே. தன்னலம், பொதுநலம் ஆகிய இரணடிலும் அமைந்தது அன்பு. பொது நலத்தின் அடிப்படையில் அமைந்தது அருள். வள்ளலாா நெறி அன்பில தொடங்கி அருளில் முடிகின்றது. அருள் நெறியில்

இறைவனை அடைந்த வள்ளலார்க்கு, இறைவன் அருள் ஒளியாகவே காட்சியளித்தான். வள்ளலார கண்ட இறைவன்

'' அருட்பெருஞ்சோதி! தனிப்பெருங்கருணை! ''

அவர் பாடியது திருவருட்பா (திரு அருள் பாட்டு)

இரகக நெறி:

பிற உயிர்கள துன்பப்படுங்காலை இயல்பாக ஏற்படுகின்ற மனவருத்தத்திற்கு இரக்கம் என்று பெயர். பிறர் அல்லலைக் கண்டு அதன் பயனுக உள்ளத்தில் ஏற்படுகினற நெகிழ்ச்சியே இரக்கமாகும். எவனொருவன் பிறர் துயரைத் தன் துயர்போல் நினைத்து அதறகாக உளம் வருநதுகின்ருனே அவன்தான் உண்மையான இரக்கமுள்ள மனிதன். இரக்கம் என்னும் தூய உணர்ச்சி சாதி, சமயம், மொழி, இனம், நாடு ஆகிய எல்லாவற்றையும் கடநது செல்லக்கூடிய ஆற்றல் வாய்ந்தது. உயர்திணையோடு மட்டும் அமையாது அஃறிணையிடமும் விரைந்து செல்லக்கூடிய பாச உணர்ச்சியே இரக்கம் எனப்படும். வாடிய பயிரையும் வாடிய மக்களையும் கணடபோது வள்ளலார் மனம் வருந்திஞர்; மனம் நொந்தார; மனம் வாடிஞர், மனம் பதைத்தார்.

'' வாடிய பயிரைக கனடபோ தெல்லாம்
வாடினேன் பசியினுல இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறுது அயர்ந்த
வெற்றரைக கண்டுளம் பதைத்தேன
நீடிய பிணியால் வருந்துகின் ருேர்என
நேர்உறக் கண்டுளம துடித்தேன்
ஈடின்மா ணிகளாய் ஏழைக ளாய்நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன் ''

(திருவருட்பா)

மக்களுக்கு இரக்க உணர்ச்சி வேணடும் என்று வள்ளலார் நீண்ட அறவுரை கூறிஞர் அல்லர். வள்ளலார் வாழ்ந்து காட்டிஞர். ஆயிரம் நீதிகளைப் பிறர்க்கு எடுத்துரைப்பவனைவிட, ஒரே ஒரு நீதியையாவது செயலில் கடைப்பிடிப்பவனுக்கே உயர்வு மிகுதி. அடிகளார் சொல்வீரர் அல்லர்; செயல்வீரர். அவர், வாழ்வின் கணணுடியே மேற்காட்டியுள்ள பாட்டாகத் திகழ்கின்றது.

அறிவு நெறி:

பக்தி இருவகைப்படும். ஒன்று தெளிந்த பக்தி, மற்ருென்று குருட்டு பக்தி. அறிவில் தெளிவும் உறுதியும் ஏற்பட்டு அதன் நற்பயனுக உளளத்தில் தோன்றுகின்ற தூய உணர்ச்சியே பக்தி எனப்படும். அறிவு ஒளி மிகுதியாக, அறியாமையாகிய மருள நீங்கும். உயிர், உலகம், இறைவன் ஆகியவைகளைப் பற்றிய உண்மைகளைக் கசடற அறிந்து, தெளிந்து, உணர்ந்து மெய்ப் பொருள்களை அடைகின்ற நெறியே அறிவு நெறி (ஞான மார்க்கம்) எனப்படும். மாணிக்க வாசகர் ஞான மார்க்கத்தைப் பின்பற்றியவர். வள்ளலார் நெறியும் ஞான மார்க்கமேயாகும். எத்தகைய நலல செயல் செய்தாலும் நன்ருக எண்ணிச் செய்வது நல்லது. 'எணணித் துணிக கருமம்' என்பது திருவள்ளுவர் வாக்கு. எல்லாம் அறிந்து அறிவின் வடிவாக இருக்கின்ற (Omniscient) இறைவனை அறிவு நெறியில் அடைந்து உணர்வது சாலச சிறந்ததெனக் கருதிஞா வள்ளலாா எனவேதான் அவருடைய பாக்கள் அருட்பாவாக மட்டும் இல்லாமல் அறிவுப் பாக்களாகவும் திகழ்ந்து கற்ருோ சிந்தையைத் தூணடி வளரச் செய்த வண்ணமிருக்கின்றன. வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம, யோகாந்தம், கலாந்தம் ஆகிய ஆறுவகையான அறிவுக் கோட்பாடுகளின் இணைப்பே வள்ளலார் கண்ட சுத்த சைவசன்மார்ககமாகும வள்ளலார் அறிவுக் கருத்துக்கள் எல்லாவற்றையும் ஒற்றுமையுணர்வுடன் இணைத்து சிந்தை

ஒருமைப் பாடு (intellectual integration) ஏற் படுத்திப் பெரும்புரட்சி செய்துள்ளார் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

'' வேதாந்த நிலையாகிச் சித்தாந்த தத்தின்
மெய்யாகிச் சமரசத்தின் விவேக மாக
நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தின்
நடுவாகி நவநிலைக்கு நண்ணு தாகி
மூதாண்ட கோடியெல்லாம் தாங்கி நின்ற
முதலாகி மனுதித முத்தி யாகி
வாதாண்ட சமயநெறிக்கமையா தென்றும்
மவுனவியோ மத்தினிடை
வயங்கு தேவே ''

'' தோனறுதவி தாத்துவித மாய்வி சிட்டாத்
துவிதமாய்க் கேவலாத் துவித மாகிச்
சான்ற சுத்தாத் துவிதமாய்ச் சுத்தந் தோய்ந்த
சமரசாத் துவிதமாய்த் தன்னே யன்றி
ஊன்றுநிலே வேறென்றும் இலதாய் என்றும்
உள்ளத்தாய் நிரதிசய
உணர்வாய் எல்லாம்
ஈன்றருளும் தாயாகித் தந்தை யாகி
எழிற்குருவாய் தெய்வதமாய்
இலங்குந் தேவே. ''

(மகா தேவ மாலே)

வள்ளலார் உணர்ந்துரைத்த பக்தி ஞான நெறி அன்றி குருட்டு பக்தியன்று; ஒளி பக்தியே யன்றி இருள் பக்தியன்று.

சமத்துவ நெறி:

உலகத்திலுள்ள மக்களிடையே ஏழை — பணக்காரன், உயர்ந்தவன் — தாழ்ந்தவன், படித்தவன் — படிக்காதவன், நண்பன் — பகைவன், முதலாளி — தொழிலாளி முதலிய வேறுபாடுகள் இருக்கின்றன. இத்தகைய வேறுபாடுகள் சமுதாயத்தைச் சீர்குலைத்து அழித்து விடுகின்றன. மல்லிகை, முல்லை முதலிய பூக்களிடையே எவ்வளவோ வேறு பாடுகள் இருக்கின்றன. எல்லாப் பூக்களையும் சேர்த்து முறையாகத் தொடுத்துப் பூமாலையாக்கிய பின் அதன் அமைப்பு கண்ணுக்கு விருந்தளிக்கிறது; மணம் மூக்கிற்கு இனபம் பயக்கின்றது; பூக்களின் இணைப்பு மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது. தனித் தனியே இருக்கும்போது பூக்களுக்கு இல்லாத அழகும் வலிமையும் மாலையில் இணைந்திருக்கும்போது ஏற்படுகின்றன. ஒற்றுமையே வலிமை என்னும் பழமொழி இதைத்தான் உணர்த்துகின்றது. பூமாலையில் பூக்கள் அழகுற இணைந்திருக்கும்போது அவற்றிடையே உள்ள உயாவு தாழ்வு என்னும் வேற்றுமை மறைந்து சமத்துவம் காணப்படுவதைப்போல செல்வம், தகுதி முதலியவற்றில் மக்களிடையே எவ்வளவோ வேறுபாடு இருப்பினும் மக்கள் அனைவரும் உள்ளத்தால் ஒன்றுபட்டால் சமுதாயம் செழித்து வலிமையுறும். எல்லாவற்றிற்கும் மேலாக சமத்துவம் நிலைபெறும்.

'' ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுள ராகிஉல கியல்நடத்தல் வேண்டும்''

என்று உள சமத்துவத்தின் அவசியத்தை இராமலிங்க சுவாமிகள் நன்கு வலியுறுத்துகின்றார். பணக்காரன் நன்றாக உண்டு கொழுக்கவும், ஏழை பசியால் வாடவும் இவ்விரு வகுப்பிற்கும் உள்ள ஏற்றத் தாழ்வையும் பிளவையும் கண்டு மனம் நொந்து பாடுகின்றார். பொருளாதாரத் துறையில் ஏற்றத் தாழ்வு நீங்கி முழுச்சமத்துவம் நிலைக்க வேணடும் என்ற தூய எண்ணமும், அந்த எண்ணம் மிகவும் விரைவில் நிறைவேற வேண்டும் என்ற தம் குறிப்பையும் மிகத் தெளிவாக கீழ்வரும் தம் பாட்டில் புலப் படுத்துகின்றார்.

'' உள்ளலேன் உடையவர் உண்ணவும் வறியார்
உறுபசி உழந்துவெந் துயரால்
வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ
மற்றிதை நினைத்திடுந் தோறும்

எள்ளலேன் உள்ளம எரிகின்ற துடம்பும
எரிகின்ற தென்செய்வேன் அந்தோ!
கொள்ளலேன் உணவும் தரிக்கிலேன் இநதக்
குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய்! ''

மக்கள் உள்ளத்தில சமத்துவ உணர்ச்சி ஏறபட வேண்டும் என்பதே வள்ளலாரின் விருப்பம்.

நீதி நெறி:

மககள் இப்படித்தான் வாழவேணடும் எனறு வரையறுக்கப்பட்ட வாழ்க்கைச் சட்டததிற்கே நீதி எனறு பெயர். நீதி எனபது எப்போதும் நன்னெறியையே குறிக கும. நீதி தவறும் போது அநீதியாக மாறு கினறது. வள்ளலார் வகுத்து வரையறுத்த வாழ்க்கைச் சட்டம் மக்கள் குலம் முழுவதிற் கும் முறறிலும் பொருநதுகினற நீதி நெறி யாகக காட்சியளிக்கின்றது. மக்கள அனை வரும் இயைநதும் இணைந்தும வாழ்கின்ற சன்மார்க்கமே நீதி நெறியாகும.

'' சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே
கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்!
அலைந்தலைந்து வீணேநீர
அழிதல் அழ கலவே!
நீதியிலே சனமார்க்க நிலைதனிலே நிறுத்த
நிறுத்தமிடுத் தனித்தலைவர்
ஒருத்தர்அவர் தாமே
வீதியிலே அருட்சோதி விளையாடல புரிய
மேவுகினற தருணம்இது
கூவுகின்றேன் உமையே. ''

வள்ளலாா அருட்பாவில் காட்டியுளள நெறி நல்வாழ்விற்கேற்ற நீதி நெறி, நல்லொழுக கத்தின் அடிப்படையில் அமைந்த நல்ல நெறி.

(தொடரும்)

ஓர் விண்ணப்பம்

16–11–72 விருநது, தி. தி. தேவஸ்தான ''புத்தக வெளியீடு'' பிரிவு, 'சப்தகிரி' அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஆகவே தி. தி. தேவஸ்தான வெளியீடுகளான நாள் காட்டிகள், நாட்குறிப்புப் புத்தங்கள், பஞ்சாங்கங்கள், அஞ்சல் பட அட்டைகள், முதலியவை சம்பந்தமாக கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு எல்லா பக்தர்களை கேட்டுக்கொள்கிறோம். மேற்கண்ட வெளியீடுகளுக்கான பண அனுப்பீடுகள் எல்லாம், கீழ்க்கணட முகவரிக்கே அனுப்பவேண்டும்.

ஆசிரியர்.

ஆசிரியா,
தி. தி. தேவஸதானம,
திருப்பதி. (ஆ. பி.)

முக்கவி கண்ட காப்பியம்

ஸ்ரீ. T. G. அனந்த சுப்ரமண்யம், திருப்பதி.

(காபேயன்)

"ஆரண்ய காண்டம்"

—⁂o⁂—

(முன் இதழின் தொடர்ச்சி)

இந்த வால்மீகியின் கருத்தை கம்பர் கொஞ்சம் அதிகமாகக் கூறுகிறார்.

"சூர் அறுத்தவனும், சுடர் நேமியும
ஊர் அறுத்த ஒருவனும, ஓம்பினும்
ஆர் அறத்திறேடு அன்றி நினறுர் அவர்
வேர் அறுப்பென் வெடுவெனமின்
நீர் என்றான்"

'அவ்வரக்கர்களுக்குப் பாதுகாப்புத் தருபவர்கள் யாராகயிருந்தாலும் சரி, அது சூரபன்மாவைக் கொன்ற முருகனாக இருந்தாலும் சரி, காலநேமியைக் கொன்ற திருமாலாக இருந்தாலும் சரி, திரிபுரமெரித்த ருத்திரனாக இருந்தாலும் சரி, அறநெறியோடு மாறுபட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை அடியோடு அழித்திடுவேன், நீங்கள் அஞ்சாதீர்கள்' என்று இராமன் கூறியதாக கம்பர் இராமனை உயர்த்திக் கூறியுள்ளார். ஸுதீக்ஷ்ணா ஆயுதம் முதலியவைகளைக் கொடுத்ததைக் கம்பர் கூறவில்லை.

அத்யாத்ம இராமாயணத்தில் ஸுதீக்ஷ்ண விருத்தாந்தத்தை அதிகமாகக் கூறவில்லை. மேலும அதயாத்ம இராமாயணத்தின் மூலமாக ஸுதீக்ஷ்ணர் அகஸ்தியா முனிவரின் சிஷ்யர் என்று தெரிகிறது. இராமன் கீழ் வருமாறு கூறுகிறான்.

"गुरुं ते द्रष्टुमिच्छामि ह्यगस्त्यं मुनिनायकम् "

எலலோரும் அகஸ்த்யாச்ரமத்தைக் குறித்துச் சென்று கொண்டிருக்கும் பொழுது சீதை இராமனிடம் சில வார்த்தைகள் சொல்லுகிறாள். இவ்விபரம் வால்மீகியில் தான் இருக்கிறது. மற்ற இராமாயணங்களில் காணப்படவில்லை.

அதாவது சீதையானவள இராமனைப் பார்த்து, 'தலைவ! தாங்கள் காட்டிற்கு அரக்கர்களையும், துஷ்டர்களையும் அழிப்பதற்கு வரவில்லை. தஙகள் தாய, தந்தை முதலியவர்களுடைய வார்த்தையைப் பரிபாலனம் செயவதற்குத்தான அவாகள் தங்களை முனி வேடத்துடன் காட்டில் வசிக்கவேணடுமெனறுதான் கூறினார்கள். தாங்களோ இங்கு க்ஷத்ரியன் செய்யும் கார்யத்தைச் செயயப் போகிறீாகள ஏன் இவையெல்லாம்?

"क्व च शास्त्रं क्व च वनं क्व च क्षात्रं तपः क्व च ।
व्याविद्धमिदमस्माभिः देशधर्मस्तु पूज्यताम् ॥"

"நம தாமமென்ன? நாம செயயவேணடியது என்ன? தாங்கள் செயவது எனக்குச் சரியாகப் படவில்லை. தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. நான பெண புத்தியால் இவைகளெல்லாவற்றையும சொன்னேன், தாங்கள் யோசிதது தம்பியோடு எது பொருத்தமோ அதைச செய்யுங்கள" என்றாள்.

"सर्वं हि विदितं तुभ्यं त्रैलोक्यमपि तत्त्वतः ।
स्त्रीचापलादेतदुदाहृतं मे धर्मं च वक्तुं
तव कस्समर्थः ॥

विचार्य बुद्ध्वा तु सहानुजेन यद्रोचते
तत्कुरु माचिरेण ॥"

இதைக்கேட்ட இராமன் "சீதே! காட்டில் முனிவர்கள் தவம், யாகம் முதலியவை கள் செய்வதற்கு இடையூறாக அரக்கர்கள் சஞ்சரிக்கிறார்கள். அவர்களை அழித்து முனிவர்களின் துயரத்தைப் போக்குவதே என் கடமை. என்னை சரணமாக அடைந்தவர்களுக்கு அபயமளித்து விட்டேன். ஆகையால் நான இக்கார்யத்தைச் செய்யப் போகிறேன்.

"मुनीनामन्यथा कर्तुं सत्यमिष्टं हि मे सदा ।
अप्यहं जीवितं जह्यां त्वां वा सीते सलक्ष्मणम् ॥
न तु प्रतिज्ञां संश्रुत्य ब्राह्मणेभ्यो विशेषतः ।
तदवश्यं मया कार्यं ऋषीणां परिपालनम् ॥ "

"சீதே! மேலும் கூறுகிறேன். முனிவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் கட்டாயம் செய்யப்போகிறேன். அதற்காக என் உயிரையும் விடத்தயார். உன்னையும், லக்ஷ்மணனையும் கூட துறக்கத் தயார். எனக்குக் கடமைதான் பெரிது." என்று கூறுகின்றான்.

"आत्मानं सर्वदा रक्षेद्दारैरपि धनैरपि"

என்று கூறப்பட்டுள்ளது.

லக்ஷ்மணனையும விடுவேன என்றால்

"भ्राता स्वा मूर्तिरात्मनः"

கூடப் பிறந்தவன தன்னைச் சேர்ந்தவன என்ற அபிப்ராயத்தில்.

"अर्धो वा एष आत्मनो पत्नी"

என்று வேதம் கூறுகிறது. மனைவியானவள் கணவனின் உடலில் பாதி" என்று. ஆகையால் மனைவியான உன்னைக்கூட நான் விடத தயார் என்று கூறினான். சொன்ன வார்த்தையைத் தவற மாட்டேன் என்பதை ஸ்ரீ தியாகராஜஸ்வரமி,

" வாடேரா தைவமு மனஸா
ஆடினமாடலு தப்படனுகனு
ஆசநதராா்கமு கீர்த்தி கலிகின "

அதாவது சொன்ன வார்த்தையைத் தவறாதவன் இராமன். சந்த்ர சூரியன் உள்ள வரை புகழ் படைத்தவன் இராமன் என்று கூறுகிறார்.

இவவிதம இராமன் கூறிவிட்டு, 'சீதே! நீ எனக்கு ஸஹதர்ம சாரிணியாக இரு, எனக்கு உன்னைவிட வேறு யார் இருக்கிறார்கள்.'

"सहधर्मचारिणी मे त्वं प्राणेभ्योऽपि गरीयसी"

என்று கூறினான்.

இராமன் முன் செல்ல சீதை நடுவில் செல்ல லக்ஷ்மணன் பின் செல்ல பல மலைகளையும், மடு, காடு முதலியவைகளையும் கடந்து பஞ்சாப்ஸரஸ் என்ற தடாகத்தை அடைந தார்கள்.

அநத தடாகத்தின் வரலாற்றை முனிவாகள் கூறுகிறார்கள். மாண்டகாணீ என்ற முனிவர் பல்லாயிரக் கணக்கான வருஷங்கள் தவம் செய்து கொண்டிருந்தார். அதைப் பொறுக்க முடியாமல் தேவர்கள் ஐந்து அப்ஸரஸ் ஸ்திரீகளை அனுப்பி வைத்தாாகள். அவர்கள் முனிவரை மயக்கித் தன் உடைமையாக்கிக கொணடார்கள். முனிவரும் தபோ பலத்தால் வாலிபனாக மாறி அவர்களுடன் இக்குளத்தின் உள்ளே வீடுகட்டிக் கொண்டு மறைவாக வசிக்கிறார். ஆகையால்தான் இந்தக் குளத்தில் மதுரமான பாட்டும் சலங்கை ஒலிகளும் கேட்கின்றன என்றார்கள். இதைக் கேட்ட இராமன் வியந்து மேலே நடக்க முற்பட்டான். ஆகையால் தான் இதற்கு "பஞ்சாப்ஸரஸ்" தீர்த்தம என்று பெயர் வந்தது என்றார்கள்.

இராமன் முனிவர்களோடு தங்கி விட்டு ஸுதீக்ஷ்ணரை அவர் ஆச்ரமத்தில் விட்டு

விட்டு, அகஸ்த்ய முனிவரைப் பார்க்கப் புறப்பட்டார். ஸுதீக்ஷ்ணர் அகஸ்த்யரின பெருமையைக் கூறுகிறார்.

'இராம! முன்னொரு காலத்தில் இக்காட்டில வாதாபி, இல்வலனென்று இரு ராக்ஷஸர்கள் வசித்து வந்தார்கள். அவர்கள் தினந் தோறும் இங்கு வசிக்கும் முனிவர்களைக் கொன்று, தின்று வந்தார்கள். வாதாபி என்பவன் ஆடு உருவம் எடுத்துக் கொள்வான். அவனைச் சமைத்து இல்வலன் எனபவன் முனிவர்போல் வேஷங்கொணடு முனிவருக்குப் போடுவான். முனிவர் அதைச் சாப்பிட்ட பிறகு இல்வலன் ''வாதாபி இங்கே வா'' என்று கூப்பிடுவான். உடனே வாதாபி முனிவரின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியே வந்து விடுவான். இவ்விதம் முனிவர்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் அகத்தியரும் அவர்களால் அழைக்கப் பட்டார். அவரும் ஒப்புக்கொண்டு சாப் பிடச் சென்றார். எப்பொழுதும போல் இல்வலன் வாதாபியைச் சமைத்துப் பரிமாறினான். முனிவர் அதைச் சாப்பிட்டார். இல்வலன் வாதாபியைக் கூப்பிட அகஸ்த்தியர் வயிற்றைத் தடவிக்கொண்டு "வாதாபி ஜீர்ணோ பவ'' என்று கூற வாதாபி உள்ளேயே ஜீரணமாகி விட்டான். இல்வலனையும் தன் தபோ அக்னியால் எரித்து விட்டார் என்று கூறி முடிக்க ஆதவன் மலையில் விழ அன்றிரவை அங்கேயே கழித்தார்கள்.

மறுநாள் அகஸ்த்யாச்ரமத்தை அடைந்தார்கள். அகஸ்த்யர் இராமனை வரவேற்று உபசரித்தார். அப்பொழுது அங்கே எல்லா தேவதைகளும் பிரஸன்னமாக இருந்தார்கள். அகஸ்த்யா தன் ஆச்ரமத்தில் அவ்விதமாக தன் கடமைகளைச் செய்து வந்தார்.

அகஸ்த்யர் இராமனுக்கு உபசரித்த விதத்தை வால்மீகி கூறுகிறார்: அதாவது வானப்ரஸ்தாச்ரமத்தில் உள்ளவர்கள் முதலில வைச்வதேவம் முதலிய நித்யகாமாக்களைச் செய்து பிறகு வந்த அதிதிகளுக்கு அர்க்யாதிகள் கொடுத்து போஜனாதிகள் செய்விக்கவேணடும் இது வானப் பிரஸ்தர்களின் கடமை. இதேபோல் அரசர்கள் அதிதியாக வந்தால் அவர்கள் கேட்டாலே யன்றி உபசரிக்கக் கூடாது. ஆனால் இங்கு இராமன் அதிதியாக வந்ததோடல்லாமல் இராமனும் வானப்ரஸ்தாச்ரமத்தில இருக்கிறான். ஆகையால் முனிவர் உபசரித்தே ஆகவேண்டும். அவ்விதம் எவனொருவன் உபசரிககவில்லையோ, அவன தன் மாமிஸத்தையே பரமலோகத்தில் உணணுகிறனென்று கூறப்பட்டுள்ளதை இங்கு ஞாபகப் படுத்துகிறா.

"उवाच राममासीनं प्राञ्जलिं धर्मकोविदम् ।
अग्निं हुत्वा प्रदायार्ध्यमतिथिं प्रति पूजयेत् ॥
अन्यथा खलु काकुत्स्थ तपस्वी समुदाचरन् ।
दु:साक्षीव परे लोके स्वानि मांसानि भक्षयेत् ॥

இராமனை பழம், கிழங்கு முதலியவைகளைக் கொணடு உபசரித்து விட்டுக கூறுகிறார். 'இராம! இதோ என்னிடம் வில்லும், அம்புராத்தூணியும் இருக்கின்றன. இந்த வில் விஷ்ணுவால் கொடுக்கப்பட்டது. அம்புராத்தூணி இநதிரனல் கொடுக்கப்பட்டது. இவைகளையும், மேலும் ஒரு கத்தியையும் கொடுக்கிறேன் பெற்றுக்கொள். இவைகளெல்லாம் அரக்கர்களை அழிக்க உதவும்'. என்று கூறி அம்மூன்றையும் இராமனிடத்தில் கொடுத்தார்:

"वैष्णवं पुरुषव्याघ्र निर्मितं विश्वकर्मणा ।
अमोघ: सूर्यसंकाश: ब्रह्मदत्त: शरोत्तम: ॥
दत्तौ मम महेन्द्रेण तूणी चाक्षकसायकौ ।
अनेन धनुषा राम हत्वा संख्ये महासुरान् ॥
जयाय प्रतिगृह्णीष्व वज्रं वज्रधरो यथा ।

''இராம! சீதைக்கு எந்த விதமான குறையும் ஏற்படாமல் நடத்திவை. ஏனெனில் பெண்கள் நல்லதை வரவேற்பார்கள். கெட்டதைச் சகிக்க மாட்டார்கள். மின்னல் போல் அவர்களுடைய எண்ணம் மாறிக்கொண்டே இருக்கும். கத்தி முனை போன்று முன் கோபத்தை உடையவர்கள். காற்றைபோல் எதிலும் வேகத்தையுடையவர்கள் இவையெல்லாம் பெண்களின் ஸ்ருஷ்டியிலேயே உண்டானது. ஆனால் சீதை அத்தகையவளல்ல.

"एषा हि प्रकृतिः स्त्रीणां आसृष्टे रघुनन्दन ।
समस्तमनुरज्ञन्ति विषमस्थं त्यजन्ति च ॥
शतह्रदानां लोलत्वं शस्त्राणां तीक्ष्णतां तथा ।
गरुडानिलयोः शैघ्र्यं अनुगच्छन्ति योषितः ॥
इयं तु भवतो भार्या दोषैरेतैर्विवर्जिता ।
श्लाघ्या च व्यपदेश्या च यथा ह्यरुन्धती ॥

மிகவும் மேன்மையானவள், தேவியான அருந்ததிபோல் உள்ளவள்' என்று கூறுகிறார். இராமன் முனிவரிடம் ஆசிகளைப் பெற்றுக் கொண்டு அடுத்து நாங்கள் எங்கே வசிக்கலாமென்று அகஸ்த்யரை இராமன் கேட்கிறான்.

"इतो द्वियोजने तात! बहुमूलफलोदकः ।
दिशोबहुमृगः श्रीमान् पञ्चवट्यभिविश्रुतः ॥
समाशः श्लाघनीयश्च नातिदूरे च राघव ।
गोदावर्याः समीपे च मैथिली तत्र रंस्यते ॥
ख्यातः पञ्चवटीत्येव नित्यपुष्पितकाननः ॥"

முனிவர், ''இராம! இங்கிருந்து இரண்டு யோஜனை தூரத்தில் பஞ்சவடீ என்ற இடம் இருக்கிறது. இந்த இடம் மிகவும் ரமயமானது சீதைக்கு மிகவும் பிடித்தமானது. அநேக மான்கள் வசிக்கக் கூடியது. கோதாவரியின கரையில அமைந்துள்ளது, சாந்தமானது. எப்பொழுதும் பழம், புஷ்பம் முதலியவைகள் கிடைக்கக் கூடியது. அங்கேயே மனைவியுடனும், சகோதரனுடன் வசிக்க நல்லது'' என்றார்.

இராமன முனிவரின் வார்த்தையைக் கேட்டு மகிழ்ந்து வணங்கி பஞ்சவடியை நோக்கிப் புறப்பட்டான். கம்பர் கீழ்வருமாறு கூறுகிறார்.

இராமன் அகஸ்தயரைப் பார்த்துக் கேட்கிறான். ''முனிவரே! தென் திசையிலிருந்து அரக்கர்கள் வருவார்கள். அவர்களை அழிக்கத் தீர்மானித்து, அத்திசையை நோக்கிச் செல்ல விரும்புகிறேன் தங்கள் அபிப்ராயம் என்னவோ'' என்று

'' செருக்கடை அரக்கர் புரிதிசை சிதை எய்தத்
தருக்கு அழிதரக் கடிது கொல்வது சமைந்தேன
வருக்க மறையோய்! அவர் வரும்
திசையின் முந்து உற்று
இருக்கை நலம்; நிற்கு அருள் என்?
என்றனன் இராமன் ''

இவ்விதம் வால்மீகியில் காணப்படவில்லை

(தொடரும்)

EDITED AND PUBLISHED ON BEHALF OF THE T. T. DEVASTHANAMS BY K SUBBA RAO, M.A. AND PRINTED AT T. T. D PRESS BY M. VIJAYAKUMAR REDDY, MANAGER, T. T D PRESS, TIRUPATI